


**04.03.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. சுயசார்பு இந்தியாவை நோக்கமாக கொண்டு மத்திய அரசு சீர்த்திருத்தங்களை முனைப்புடன் மேற்கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. சைபர் இணையதள போர் முறைகள் போன்ற அச்சுறுத்தல்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக உருவாகி உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் கரும்பின் கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 151 ரூபாயாக நிர்ணயம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

4. இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 14 தமிழக மீனவர்கள் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.

5. துபாயில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் அரையிறுதியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

சுயசார்பு இந்தியாவை நோக்கமாக கொண்டு சீர்த்திருத்த பாதைகளை மத்திய அரசு முனைப்புடன் மேற்கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியின் உந்துசக்தி என்ற தலைப்பிலான பட்ஜெட்டிற்கு பிந்தைய இணையதள கருத்தரங்கில் இன்று உரையாற்றிய பிரதமர், நிதி, ஒழுங்குமுறை, வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற சீர்த்திருத்தங்கள் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ள பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன் மூலம் தொழில்பிரிவுகளில் புதிய தன்னம்பிக்கை ஏற்பட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கோவிட் 19 தொற்றால், பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கத்தை அரசின் சீர்த்திருத்த முயற்சிகள் பெருமளவு குறைத்திருப்பதாக அவர் கூறினார்.

இதனால் இந்தியா வேகமாக வளர்ச்சிபெறும் பொருளாதார நாடாக உருவெடுத்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா உடனான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த உலகின் பல்வேறு நாடுகள் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை பிரதமர் எடுத்துரைத்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான கொள்கைகளும், உகந்த வர்த்தக சூழலும் இன்றியமையாதது என்று கூறிய பிரதமர், நிதிசாரா பிரிவுகளை ஆய்வுசெய்ய குழு ஒன்று அமைக்கப்படும் என்றார்.

உற்பத்தியையும், ஏற்றுமதியையும் மேம்படுத்த நிதிநிலை அறிக்கையில் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

சைபர் குற்றங்கள், வான்சார்ந்த தடைகள், இணையதள போர் உள்ளிட்ட மரபுசாரா அச்சுறுத்தல்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக உருவாகி உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்நாட்டு பாதுகாப்பில் அதிநவீன தொழில்நுட்பங்கள் என்ற கருத்தரங்கில் இன்று உரையாற்றியஅவர், உள் மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பு முறைகள் சிக்கலை தோற்றுவித்துள்ளதாக கூறினார்.

எதிரிகளின் ஊடுருவல், நக்சலைட் தீவிரவாதம், பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிலைமைகளை சுட்டிக்காட்டிய அவர், இதற்கான தீர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றார்.

இதற்காக பாதுகாப்பு முகமை நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் உயர் தொழில்நுட்ப பணிகளுக்கு பாராட்டு தெரிவித்த திரு. ராஜ்நாத் சிங் மத்திய ஆயுதப்படை காவல்துறை உள்ளிட்டவற்றை வலுப்படுத்துவதற்கான பல்வேறு தொழில்நுட்பங்களை இந்த அமைப்பு உருவாக்கி இருப்பதாக புகழாரம் சூட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>பூபேந்தர் யாதவ்</u>

நாட்டின் சுழற்சி பொருளாதாரம் 2 டிரில்லியன் டாலருக்கும் அதிகமான சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் ஆசிய பசிபிக் சுழற்சி பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், இதன்மூலம் அடுத்த 25 ஆண்டுகளில் ஒருகோடி வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார்.

குப்பைகளை அகற்றுதல், மாசு கட்டுப்பாடு, மறுசுழற்சி மூலம் இயற்கையை புதுப்பிப்பது ஆகிய 3 அம்சங்களே வட்ட பொருளாதாரத்தின் முக்கிய கொள்கைகள் என்று சுட்டிக்காட்டினார்.

வளமான புவியை உருவாக்கும் நோக்கில் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டம் தொடங்கப்பட்டதாக கூறியஅமைச்சர், மத்திய அரசு நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்லும் கொள்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

பிரிட்டன் மற்றும் அயர்லாந்து நாடுகளுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 6 நாள் அரசு முறை பயணமாக இன்று செல்கிறார்.

இப்பயணத்தின் முதற்கட்டமாக பிரிட்டன் வெளியுறவு துறை செயலர் டேவிட் லாமியுடன், பாதுகாப்பு, வர்த்தகம், சுகாதாரம், பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து திரு.ஜெய்சங்கர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து அயர்லாந்து செல்லும் அவர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சைமன் ஹாரீசுடன் இருதரப்பு ஆலோசனைகள் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

பேரிடர்

நிலநடுக்கம் சவால்களை எதிர்கொள்வதற்கான திறன் கட்டமைப்பு ஒருநாள் கருத்தரங்கு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

தயாரிப்பு நடவடிக்கைகள், சேதங்களை குறைப்பதற்கான கட்டுப்பாட்டு முறைகள் போன்றவை குறித்த விவாதங்கள் இதில் இடம்பெற்றன.

நில நடுக்கங்களுக்கு பின்னர் பொருள் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் வலுவான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்று இதில் வலியுறுத்தப்பட்டது.

பேரிடர் மேலாண்மை நிபுணர்கள், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

புதுதில்லியில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கும் 2 நாள் மாநாடு இன்று தொடங்கியது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் நவீன தேர்தல் மேலாண்மை குறித்து விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் இதில் பங்கேற்றுள்ளார்.

❖❖❖❖❖❖❖

கரும்பு

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில் கரும்பிற்கான கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 151 ரூபாயாக விலை நிர்ணயம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி 9.5 சதவிகிதத்திற்கும் குறைவான சர்க்கரை திறன் கொண்ட கரும்பிற்கு இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

9.85 சதவிகித சர்க்கரைத் திறன் கரும்பு டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 267 ரூபாயாகவும்,

10.10 சதவிகித சர்க்கரைத் திறன் கரும்பு டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 344 ரூபாயாகவும்,

10.65 சதவிகித சர்க்கரைத் திறன் கரும்பு டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 532 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் தற்போது 9 சிறுவிளையாட்டரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணாசாலையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிறு விளையாட்டரங்கை அவர் இன்று துவக்கிவைத்தார்.

.. வாய்ஸ் ..

மதுரை மாவட்டம் சோழவந்தான், தூத்துக்குடி திருவைகுண்டம், சிவகங்கை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ள சிறு விளையாட்டு அரங்கங்களையும் காணொலி மூலம் அவர் திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖

ராஜேந்திரன்

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில், சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வெள்ளையாற்றில் அமையவுள்ள படகு குழாம் பணிகளை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ஆர்.ராஜேந்திரன் இன்று ஆய்வுசெய்தார்.

செருதூர் பாலத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமையவுள்ள இப்படகு குழாமின் அலையாத்தி அடர்வன காடுகள் அமைக்கப்பட்டு படகோட்டுதல், நீர் சறுக்கு விளையாட்டு, நீர் விளையாட்டுகள் போன்றவை அமையவுள்ளன.

தொடர்ந்து பிரதாப ராமபுரம் பூவைத்தேடி கடற்கரையை பார்வையிட்ட அமைச்சர், சுற்றுச்சூழல் மற்றும் கிராமப்புற சுற்றுலா திட்டம் குறித்தும் ஆய்வு செய்தார்.

❖❖❖❖❖❖❖

சேகர்பாபு

வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் நடைபெறும் பணிகளை இதன் தலைவரும் மாநில அமைச்சருமான திரு.சேகர்பாபு இன்று நேரில் ஆய்வுமேற்கொண்டார்.

இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 14 தமிழக மீனவர்கள் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதிகளை சேர்ந்த 14 மீனவர்கள் சென்ற மாதம் 7-ம் தேதி இரவு கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் இம்மீனவர்களை கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மத்திய, மாநில அரசுகளின் பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இலங்கை சிறையிலிருந்து இப்பதினான்கு மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டு கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மருத்துவ சோதனைகளுக்கு பின்பு இவர்கள் அனைவரும் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இம்மீனவர்களை விமான நிலையத்தில் வரவேற்ற மீன்வளத்துறை அதிகாரிகள் தனி வாகனம் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

❖❖❖❖❖❖❖

முல்லைபெரியாறு

முல்லைபெரியாறு அணையின் மேற்பார்வை குழு கூட்டம் இம்மாதம் 22-ம் தேதி நடைபெறுகிறது

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் திரு. அனில் ஜெயின் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவினர் இந்த கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

தேக்கடி அருகே குமுளியில் நடைபெறும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழ்நாடு, கேரள அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் மற்றும் காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அணையின் பராமரிப்பு பணிகள் குறித்து தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது.

முல்லை பெரியாறு மேற்பார்வை குழு கூட்டத்தை ஒருவாரத்தில் கூட்ட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

அணை பராமரிப்பு தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேற்பார்வை குழுவினர் அணையையும் நேரில் ஆய்வு செய்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

அய்யா வைகுண்டர்

கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பில் அமைந்துள்ள அய்யா வைகுண்டரின் தலைமைபதியில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களிலிருந்தும் மற்றும் கேரள மாநிலத்தை சேர்ந்த ஏராளமானோரும் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

பேருந்து

தென் மாவட்டங்களிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்பட்ட அனைத்து அரசு பேருந்துகளும் இன்றுமுதல் சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை மட்டுமே இயக்கப்படுகின்றன.

விழுப்புரம், சேலம், கும்பகோணம் கோட்ட பேருந்துகள் தாம்பரம் வரை இயக்கப்பட்ட நிலையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி தென்மாவட்டங்களிலிருந்து செல்லும் பேருந்துகள் அனைத்தும் வண்டலூர் மேம்பாலத்தின் கீழே திருப்பப்பட்டு கிளாம்பாக்கத்திற்கு அனுப்பப்படுகின்றன.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து சென்னை மாநகரத்திற்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக ஏற்கனவே இயக்கப்படும் 589 மாநகர பேருந்துகளோடு கூடுதலாக மேலும் 104 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

நாமக்கல் - வாய்ஸ்

நாமக்கல் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ சேவை வாகனம் மூலம், கால்நடை வளர்ப்போர் பயனடைந்து வருகின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

குற்றாலம் - வாய்ஸ்

குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததையடுத்து, 3 நாட்களுக்குப்பிறகு சுற்றுலா பயணிகள் அங்கு குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

துபாயில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் அரையிறுதியில் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு இந்தியா - ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

நாளை நடைபெறும் 2-வது அரையிறுதியில் நியூசிலாந்து - தென்னாப்பிரிக்காவுடன் மோதுகிறது.

இறுதி போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டிகள் பிரான்சில் இன்று தொடங்குகின்றன.

இன்று நடைபெறும் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், டென்மார்க்கின் கிறிஸ்டோபர் சென் - ஐ எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

யோகாசனம்

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில் 2-வது ஆசிய யோகாசன சாம்பியன் பட்ட போட்டிகள் வரும் 29ம் தேதி புதுதில்லியில் தொடங்குகின்றன.

3 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளில், 16 நாடுகள் பங்கேற்கின்றன.

❖❖❖❖❖❖❖